# ஆன்மீகக் கூட்டம் நடத்தும் விதிமுறைகள்

குருவடி பணிந்து
மருத்துவ கலாநிதி இ. லம்போதரன் MD
கனடா சைவசித்தாந்த பீடம்
www.knowingourroots.com

1. ஆன்மீகக் கூட்டத்துக்கு வரும் பேச்சாளர்களையும், பெரியோர்களையும், குருமாரையும் வரவேற்கும்போது அவர்களுக்கு நாம் மாலை போடுவதையும், பொன்னாடை போர்த்துவதையும் தவிர்க்க வேண்டும். அருகில் உள்ள **ஆலயத்தில் மூர்த்திக்கு மலரும், மாலையும், பட்டும் இல்லாதிருக்க வருகை தருகின்றவர்களுக்கு இவற்றை அணிவித்தல் சிவத்துரோகம்.**

2. ஆன்மீகக் கூட்டங்களில் வரவேற்பின்போது **மாலை போடுதலும், பட்டாடை போர்த்தலும், புகைப்படத்திற்காக அபிநயம் பிடிப்பதும், உறவினர்களை வரவேற்பது போலக் கை கொடுத்து வரவேற்பதும், கட்டி அணைத்து வரவேற்பதும் தவிர்க்கப்பட வேண்டும்.**

"ஆரம் ஐயர் அணிந்த ஐயர்தம் அன்பர் என்பதோர் தன்மையால்

நேர வந்தவர் யாவராயினும் -----எதிர் கொண்டு கைகள் குவித்து நின்று

ஈர மென்மதுரப்படம் -----முன் உரை செய்த பின்

**- இளையான்குடிமாற நாயனார் புராணம்**

மிக்க தமிழ்த் தொடை மாலை சாத்தி மேவிய ஏழிசை பாடிப் போந்து
திக்கு நிறை சீர் முருகர் முன்பு செல்ல அவர் மடம் சென்று புக்கார்
**- திருஞான சம்பந்தர் புராணம்**

3. ஆன்மீகக் கூட்டங்களைச் சிறப்பாகச் செய்ய வேண்டின் வாசலில் நீர் தெளித்து, கோலம் போட்டு, தோரணம் கட்டி, பூரண கும்பம் வைத்து வரவேற்கலாம்.

புகழ்ந்த கோமயத்தின் நீரால் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்த வான் சுதையும் போக்கி

-

4. ஆன்மீகக் கூட்டங்களில் மிகச்சிறப்பான வரவேற்பு அளிக்க விரும்பினால் அருகில் உள்ள ஆலயத்தில் உள்ள மூர்த்திக்கு முன்னரேயே அபிசேகம் செய்வித்து, விசேடமாக மாலை, பட்டு முதலியன அளித்து அலங்காரம்

செய்வித்து வருகை தரும் பெரியவர்களையும், பேச்சாளர்களையும் அங்கு முதலில் அழைத்துச்சென்று வரவேற்று மேள வாத்திய இசைகளுடன் பூசை, தரிசனம் செய்வித்து அங்கே **காளாஞ்சியுடன், விபூதி, இறைவனுக்கு அணிவித்த மாலை முதலானவற்றைப் இறை பிரசாதமாக காளாஞ்சியுடன் சிவாச்சாரியார் மூலமாக வழங்கி** கூட்டத்துக்கு அழைத்துச் செல்லலாம்.

5. **ஆலயத்துள்** எக்காரணம் கொண்டும் **குருமார்கள் உட்பட** மற்றவர்களை வணங்குவதும், மரியாதை செய்வதும், வார்த்தைகளால் புகழ்வதும் செய்யத்தகாத குற்றங்களாம். **ஆலயத்தில் மரியாதைக்கும், வணக்கத்துக்கும், புகழுக்கும் உரியவன் இறைவன் ஒருவனே. மேலதிக விபரங்களுக்கு ஆறுமுகநாவலரின் சிவாலய தரிசன விதி பார்க்க.**

6. ஆன்மீகக் கூட்டங்களுக்கு வருகை தரும் **குருமாரை அவர்கள் நின்று கொண்டும், நடந்துகொண்டும், பேசிக்கொண்டும் இருக்கும்போது வணங்குதல் கூடாது.** வணங்கவேண்டுமாயின் அவர்கள் சென்று இருக்கையில் அமர்ந்தபின் வணக்கம் செலுத்தலாம். எக்காரணம் கொண்டும் **குருமாரையும், பெரியவர்களையும் எக்காலத்திலும் நாம் தொட்டு வணங்குதல் கூடாது. சாத்தியப்படுமாயின் பாத பூசை செய்யலாம்.**

மனைவியாருடன் மக்கள் மற்றுமுள்ள சுற்றத்தோர்கள்
அனைவரையும் கொண்டு இறைஞ்சி ஆராத காதலுடன்
முனைவரை உள் எழுந்தருளிவித்து அவர் தான் முன் விளக்கும்
புனைமலர் நீர் தங்கள் மேல் தெளித்து உள்ளும் பூரித்தார்.

- **அப்பூதி அடிகள் புராணம்**

------தூ நீரால்
சேய மலர்ச்ச்சேவடி விளக்கித் தெளித்து உட்கொண்டு அச்செழும் புனலால்
மேய சுடர் மாளிகை எங்கும் விளங்க வீசி உளங்களிப்ப

**- ஏயர்கோன் கலிக்காமர் புராணம்**

7. ஆன்மீகக் கூட்டங்களிலும், மேடையிலும் வருகை தரும் குருமாரை தகுந்த ஆசனத்து இருத்தல் வேண்டும். இல்லையேல் பொதுவான இருக்கைகளில் ஒரு சுத்தமான துணி போட்டு அவர்களை அமரச்செய்தல் வேண்டும். அவர்கள் அமர்ந்த இருக்கையில் மற்றவர்கள் மாறி அமர்தலும் மற்றவர்களை அமர்த்தலும் கூடாது.

தூமணித் தவிசில் எழுந்தருளி---

**- ஏயர்கோன் கலிக்காமர் புராணம்**

**கண்டு காதலின் ஆதனத்திடை வைத்து அருச்சனை செய்தபின்**

**- இளையான் குடிமாற நாயனார் புராணம்**

திருந்து ஆசனத்தில் ஏறி

**- அப்பூதி அடிகள் புராணம்**

8. குருமாரையும், சிவாச்சாரியார்களையும் விட மற்றப் பிரமுகர்களுக்கு உயர்ந்த ஆசனமும், மரியாதையும் வழங்குதலும், அவர்களுடன் குருமாரைச் சரியாசனத்தில் அமர்த்துவதும் தவறு. ஆகக் குறைந்தது குருமாரை அமர்த்தும் ஆசனத்தில் ஒரு வஸ்திரமாவது போட்டு அவர்களை அமரச் செய்தல் வேண்டும். அவர்கள் அமரும் வரை மற்றவர்கள் எழுந்து நின்று குருமார்கள் அமர்ந்த பின்னர் தாம் அமர்தல் வேண்டும்.தெரியாவிட்டால் எமது பௌத்த சகோதரர்களைப் பார்த்தாவது பழகிக்கொள்ள வேண்டும். அரசவையும், அரச ஊழியர் அலுவலகங்களும் விதிவிலக்கு.

9. ஆன்மீகக் கூட்டங்களில் நிகழ்ச்சிகளில் எக்காரணம் கொண்டும் **பிரமுகர்களுக்காக என்று குருமார்களையோ, பேச்சாளர்களையோ தாமதம் செய்தல் கூடாது.**

10. ஆன்மீக கூட்டம் எப்பொழுதும் **மங்கல விளக்கேற்றி ஆரம்பிக்க வேண்டும்.** குத்து விளக்கு இல்லாவிட்டால் ஒரு சிறு தீபமாவது ஏற்றப்படுதல் வேண்டும்.

சிறப்புடைத் தீபம் ஏற்றி

**- அப்பூதி அடிகள் புராணம்**

பரிகலமும் பாவாடை பகல் விளக்கும் உடனமைத்துத்

**- கழற்றறிவார் புராணம்**

கூட்ட ஆரம்பத்தில் தீபம் ஏற்றுவது முடியாவிட்டால் ஆரம்பிக்க முன்னரே ஒரு தீபம் ஏற்றி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இறை காரியங்கள் அனைத்துக்கும் அக்கினி இறைவனின் கண்ணாக நின்று சாட்சியாகின்றது. இதனால்தான் எமது மரபில் பட்டப்பகலிலும் தீபம் ஏற்றியே புராணம் படிப்பார்கள். மங்கல விளக்கேற்றுவதற்கு குணத்தாலும், செயலாலும் நிறைந்த மக்களைக்கொண்டு விளக்கு ஏற்றுவித்தல் வேண்டும். அரசியல் பிரமுகர்களையும், செல்வந்தர்களையும், எமது மரபறியா அன்னியர்களையும் தேடிப்பிடித்து அவர்கள் மூலமாக மங்கல விளக்கேற்றுவதைத் தவிர்க்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பாதணி அணிந்துகொண்டு மங்கல விளக்கு ஏற்றுதல் கூடாது. மாத விலக்கான காலத்தில் பெண்கள் மங்கல விளக்கு ஏற்றுதல் எமது மரபல்ல. இது பற்றி முன்னரே அவர்களுடன் பேசித் தீர்மானித்து வைத்திருந்தால் கால தாமதத்தையும், சங்கடங்களையும்

தவிர்க்கலாம். புகைப்படம் எடுப்பதற்காக என்று நின்று கொண்டும், அபிநயம் காட்டிக்கொண்டும் விளக்கு ஏற்றுதல் கூடாது. ஏற்றிய திரிகளை அணைத்து மீண்டும் ஏற்ற வைத்தல் கூடாது.  ஏற்றிய மங்கல விளக்கை கூட்டம் முடியும்வரை எண்ணெய் ஊற்றி அணையாமல் பாதுகாத்தல் வேண்டும். வாயினால் விளக்கை ஊதி அணைக்கக் கூடாது. கூட்டம் முடிந்தபின் மலர் ஒன்றை வைத்து அணைக்கலாம்.

11. ஆன்மீகக் கூட்டங்களுக்கு வருகை தருகின்ற அரசியல் மற்றும் சமூகப் பிரமுகர்களுக்கும் குருமாருக்குச் செய்யும் அதேவிதமாக மரியாதை செய்தல் சமயத்தையும், ஆன்மீகத்தையும் அவை சார்ந்த குருமாரையும் தரம் தாழ்த்தி அவமதிக்கும் செயலாகும்.

12. ஆன்மீகக் கூட்டங்களில் இறைவனையும் மெய்யடியார்களையும் அன்றி சாதாரண மானுடர்களைப் புகழ்தலும், பாரட்டுதலும், தமது தனிப்பட்ட சாதனைகளைப் பற்றிப் பறை சாற்றுதலும் இயன்றவரை தவிர்க்கப்பட வேண்டும். தன்னை மையமாகக் கொண்டு செயற்படும் **சுயதர்மம்**, மற்றவர்களை முன்னிலைப்படுத்திச் செய்யப்படும் சமூக சேவையாகிய **வைதிக தர்மம்**, இறையை மையப்படுத்திச் செய்யப்படும் **சிவ தர்மம்** ஆகிய மூவகைத் தர்மங்களையும் உள்ளடக்கிய **சநாதன தர்மத்தில்** ஆன்மீகக் கூட்டமானது இறையை மையப்படுத்திச் செய்யப்படுகின்ற சிவ புண்ணியச்செயலாகும். தன்னை மையப்படுத்திச் செய்யும் செயற்பாடுகளும், பிறரை மையப்படுத்திச் செய்யும் செயற்பாடுகளும் பொதுக்கூட்டங்களில் செய்வதில் தவறில்லையாயினும் ஆன்மீகக் கூட்டங்களில் இவ்வாறு செய்வது சிவத்துரோகமும், சிவ அபராதமும், சிவனுக்குரியதை நாம் அபகரிக்கும் சிவத்திரவிய அபகாரமும் ஆகும். எல்லாப் புகழும் இறைவனுக்கே.  அதை விடுத்து மானுடரைப் போற்றுதலும் புகழுதலும் சிவன் சொத்தைக் கொள்ளையடிப்பது போலாகும். சிவன் சொத்து குலநாசம்.

13. வருகை தரும் குருமார்களைக்கொண்டும், அடியவர்களைக் கொண்டும் ( பெரியவர்கள் கிடையாது - இவர்களை விட) தமக்கும், தாம் சார்ந்த அமைப்புகளுக்கும், தம்மைச் சார்ந்தவர்களுக்கும், அநுசரணை வழங்கிய தனவந்தர்களுக்கும், அரசியல் பிரமுகர்களுக்கும், அடிவருடிகளிற்கும் மரியாதை செய்வித்தல், பாராட்டிதழ்கள், பட்டங்கள் வழங்குதல் சிவத்துரோகமாகும். சிவத்தை மட்டுமே வணங்கி நடமாடும் சிவ ரூபமாகவுள்ள இவர்களைக்கொண்டு நடமாடும் பிணங்களாக உலா வருபவர்களுக்கு கௌரவம் வழங்குவிப்பது மாபெரும் சமயக் குற்றமாகும்.

சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகிற்

சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள் இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுவென் இம்மையிலே உயிரின்
பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவ ரன்றோ

**- சிவஞானசித்தியார் பாடல் 287.**

அரிசனம் பூசி மாலை அணிந்துபொன் னாடை சாத்திப்
பரிசனம் பின்பு செல்லப் பாரகர் பரிக்கக் கொட்ட
வரிசின்ன மூதத் தொங்கல் வந்திட வுணர்வு மாண்டு
பெரியவர் பேச்சு மின்றிக் கிடத்தலால் பிணத்தோ டொப்பர்.
**- சிவஞானசித்தியார் பாடல் 185**

பிணத்தினை ஒத்து வாழ்வோர் பின்னடைப் பிணங்கள் போல
உணக்கியே உழல்வீர் உங்க ளுடலுயிர் உணர்வு மெல்லாம்
கணத்திடைத் தோன்றி மாயும் காயமென் றறிந்தொ ருக்கால்
வணக்குறீர் அரனை என்றும் வானவர் வணங்க வைப்பன்.
**- சிவஞானசித்தியார் பாடல் 186.**

இதை விளங்காவிட்டால் எமது பௌத்த, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய சகோதரர்களின் சமயக் கூட்ட நடைமுறைகளைப் பார்த்தாயினும் திருந்திக்கொள்ளவேண்டும்.

13. ஆன்மீகக் கூட்டங்களில் பாராட்டுவதற்காக கை தட்டல் தவிர்க்கப்பட வேண்டும். இது பொதுக் கூட்ட வழமை. ஆன்மீகக் கூட்டங்களில் இவ்வாறான சந்தர்ப்பங்களில் **ஹர ஹர மகாதேவா** என்றொ **சிவ சிவ** என்றோ இறை நாமத்தால் கோஷம் போடுதல் பொருந்தும். இது மகா விஷ்ணுவால் சிவன் பார்வதி திருக்கலியாணத்தில் கூறப்பட்ட கோஷமாகும்.

14. ஆன்மீகக் கூட்டங்களில் மற்றவர்கள் பார்த்திருக்கவும் காத்திருக்கவும் அவர்கள் முன்பாக குருமாருக்கு பானம், உணவு வகைகள் பரிமாறிவதைத் தவிர்க்க வேண்டும். தண்ணீர் மாத்திரம் வழங்கலாம். உணவு, பானங்கள் கொடுக்க வேண்டின் அவர்களின் முன் அனுமதி பெற்று அவர்களை அழைத்துச் சென்று உபசரித்தல் வேண்டும்.

15. மாகேசுர பூசையுடன் கூடிய கூட்டமாக இருந்தால் குருமார்களுக்கும், சன்னியாசிகளுக்கும் பரிமாறிய பின்னரே மற்றவர்களுக்கு உணவு படைத்தல் வேண்டும். உணவுக்கு முன்னர் திருமுறை தோத்திரம் ஓதி உணவு உண்ணத் தொடங்குதல் வேண்டும். குருமார்களுக்கு உணவு, பானங்கள் வழங்கப் படாமல் அல்லது அவர்களின் முன் அனுமதி பெறாமல் மற்றவர்களுக்கு பரிமாறக் கூடாது.

16. குருமார்கள் கூட்டத்தில் இருந்து வெளிச்செல்லும்போது அவருடன் வாகனம் வரை உடன் சென்று வழியனுப்பி வரல் வேண்டும். இல்லாவிடின் அவர்களுடன் ஏழு அடி வரை சென்று வழியனுப்புதல் வேண்டும். அவர்களுக்கு இயன்ற தட்சணையும், மரியாதையும் வழங்கி அனுப்பி வைத்தல் வேண்டும்.

மொத்தத்தில் ஆன்மீகக் கூட்டம் என்பது வெறுமனே ஒரு பொதுக் கூட்டம் போலவோ, பிரச்சாரக் கூட்டமாகவோ, சுயவிளம்பரம் தேடும் கூட்டமாகவோ, எமது ஆட்பலத்தைக் காட்டும் கூட்டமாவோ, எமக்கும், எம்மைச் சார்ந்தோருக்கும், எமக்குஅநுசரணை செய்யக்கூடியவர்களுக்கும் கௌரவம் செய்து பட்டம் அளித்துப் பொன்னாடை போர்த்தும் கூட்டமாகவோ இல்லாமல் மெய்யான ஆன்ம நாட்டமுள்ளவர்கள் கூடி ஆத்ம விசாரம் அல்லது விசாரணை செய்யும் கூட்டமாகத் திட்டமிட்டு நடத்தப்பட வேண்டும். அங்கு பேசப்படுவதும், போற்றப்படுவதும், புகழப்படுவதும் இறைவனுடையதும் அவனடி சார்ந்த மெய்யடியார்களிதும் புகழாகவே இருக்கவேண்டும். நடத்துபவர்களினதும், பேச்சாளர்களினதும் இறை அன்பும், பயபக்தியும், சமய வழிமுறையும் மற்றவர்களைத் தொற்றிப்பற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். எம்மை மெய்யடியாருடன் கூட்டி, மெய்யான மார்க்கத்தைக் காட்டி, மெய்வழி நடத்தி, மெய்யுக்கே இட்டுச் செல்லும் சிறப்பு வாய்ந்த ஆன்மவிடுத்லைக் கூட்டங்களாக எமது அன்மீகக்கூட்டங்களை எமது சமய ஆன்மீக மரபுப்படி திட்டமிடவும், நடத்தவும் வேண்டியது அத்தியாவசியமானது. அவ்வாறில்லாமல் நடைபெறும் ஆன்மீகக் கூட்டங்களினால் அரசியல், சமூக நலன்கள் சிலவற்றை நிலைநாட்ட முடிந்தாலும் பங்கு பற்றுபவர்களின் இறை நம்பிக்கையையும், நடைமுறையையும் பலப்படுத்தி, ஆன்மீக நன்மைகளைக் கொடுக்க முடியாது.